தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**15254**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.2009.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு R.ரவிச்சந்திரன்,<br>42/8, டவுண் ஹால் 2–வது தெரு,<br>சுவால்பேட்டை,<br>அரக்கோணம்,<br>வேலூர் மாவட்டம். |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம்,<br>காஞ்சிபுரம். |

*****

மனுதாரர் திரு R.ரவிச்சந்திரன் மற்றும் வழக்கறிஞர் திரு S.சுப்பிரமணியன் பாலாஜி, மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு K.B.பாண்டுரங்கன், கூடுதல் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் இன்று **(24.09.2009)** இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் **31.01.2008** அன்று பொதுத் தகவல் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களிடம், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன், வடநெமிலி கிராமத்தில் சர்வே எண்.**320/2** தொடர்பாகச் சில தகவல்களைக் கேட்டு மனுச் செய்துள்ளார். **28.08.2008** அன்று துறைக்கு மேல் முறையீடு

செய்துள்ளார். 02.09.2008 அன்று நினைவூட்டுக் கடிதம் அளித்துள்ளார். தகவல்கள் பெறாததால் 01.07.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (24.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது குறித்துப் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது மனுதாரர் குறிப்பிடும் கோப்பு எண்.28390/07 குறித்து விசாரணை நடைபெற்றதாகவும், மனுதாரர் மட்டும் விசாரணைக்கு வந்ததாகவும், எதிர் மனுதாரர் வராததால் விசாரணை அறிக்கை ஏதும் இல்லையென்று 31.01.2008 நாளிட்ட மனுவிற்குத் தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

02.09.2008 அன்று கோப்புகளைப் பார்வையிடுவதற்கு மனுதாரரால் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அதற்கு எந்தவிதமான பதிலும் அளிக்கப்படவில்லையென்று மனுதாரர் கூறினார். 13.04.2009 நாளிட்ட மனு கோரிக்கை விண்ணப்பமாக உள்ளது என்று பொதுத் தகவல் அலுவலர் தகவல் தரவில்லை. இந்நிலையில் மனுதாரரை விசாரித்த போது நீதிப் பேராணை எண்.20506/2007 உத்திரவுப்படி மூன்று மாதங்களுக்குள் அதாவது 15.09.2007–க்குள் மேற்படி விவகாரத்தில் மாவட்ட ஆட்சியர் உத்திரவு பிறப்பித்திருக்க வேண்டும். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடைபெறவில்லையெனவும், நீதிமன்றம் உத்திரவிட்டு இரண்டு ஆண்டுகள் முடிவுற்றதாகவும், இது குறித்து யாதொரு நடவடிக்கையும் எடுத்து உத்திரவு இடப்படாததால் தனது சொத்தை அனுபவிக்க முடியாமல் துன்பப்படுவதாகவும் கூறினார். இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. பொதுத் தகவல் அலுவலர் இவ்வழக்கு தொடர்பாகக் கொண்டு வந்திருந்த அரசு கோப்புகளைப் பார்வையிட்டு தேவைப்பட்ட பக்கங்களைக் குறிப்பிட்டால் எவ்வித கட்டணமுமின்றி அதற்கு உரிய நகல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2. கோப்பினைப் பார்வையிட வேண்டுமென்று 02.09.2008 அன்று கேட்டுள்ள மனுதாரரின் மனுவிற்கு ஓராண்டாக எவ்வித பதிலும் தராத பொதுத் தகவல் அலுவலர் மீது ஏன் அதிகபட்ச அபராதம் விதிக்கலாகாது என்பதற்கு உரிய விளக்கத்தினைப் பெற்று இவ்வாணை பெறப்பட்ட ஒரு மாதத்திற்குள்

ஆணையத்திற்குத் தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மாவட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. இவ்வழக்கு குறித்து மாவட்ட ஆட்சியருக்கு நீதிப் பேராணை உத்திரவு அளித்துள்ளதால், உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, உரிய தகவல்களை மனுதாரருக்கு அளிக்கும்படி மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் மாவட்டம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.15254/விசாரணை/2009</u>**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம் மாவட்டம்,
காஞ்சிபுரம்.

திரு R.ரவிச்சந்திரன்,
42/8, டவுண் ஹால் 2–வது தெரு,
சுவால்பேட்டை,
அரக்கோணம்,
வேலூர் மாவட்டம்.

*"ptl"*